**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

வணிக வழக்கு எண்.01/2024 நாள்- 30.10.2025

**வா.சா.1-அய்யாச்சாமி**

**<u>வா.சா.1-ன் குறுக்குவிசாரணை பிரதிவாதி தரப்பில்</u>**

பிரதிவாதியை எனக்கு தெரியும். நானும் பிரதிவாதியும் எனக்கு பாத்தியப்பட்ட இ,டத்தில் கட்டிடம் கட்டுவதற்கு வாசாஆ.1 ன்படி ஒரு ஒப்பந்தம் செய்து கொணடோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் கிணறு உள்ளது என்றால்சரிதான். அந்த கிணற்றின் ஆழம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் அந்த கிணற்றை நான் முடிவிட்டேன். ஒப்பந்தம் செய்யும் போது குளத்து ம ண் மூலம் அந்த கிணற்றை முடிவிட்டேன். அதனால் அந்த கிணற்றின் ஆழம் பற்றி வா.சா.ஆ.1 ல் கூறவில்லை என்றால் சரிதான். கிணற்றின் ஆழம் பற்றி தெரியாத காரணத்தினால் வாசாஆ.1 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கிணற்றின் பாறையிலிருந்து தரைதளம் வரை கல்கட்டிடம் இருந்தது என்றால் சரிதான். அதன் தரைதளத்தில் இருந்து 4 அடி உயரத்தில் சுற்று சுவர் இருந்தது என்றால் 2 ½ அடி உயரம் தான் இருக்கும் கிணறு இருப்பதால் அடித்தளம் அமைப்பின் மூலம் கட்டிடம் கட்ட வேண்டும என்று ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான். கிணறு இருப்பதால் ஒரு அமைப்பு மற்றும் டிசைனர் பொறியாளர் மூலம் கட்டிடம் கட்ட வேண்டும என்று ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரிதான். டிசைனர் பொறியாளர் மதுரைச் சேர்ந்த Cos consultancy and Architect என்ற நிறுவனத்தை சேர்ந்த மயில் வாகனம் என்பவரின் வழிகாட்டுதலின் கட்டிடம் கட்ட வேண்டும என்று நான் ஒப்புக் கொண்டேன் என்றால் சரிதான் ஆனால் வாசாஆ.1 ஒப்பந்தத்தில் இல்லை. என் சொத்தின் மொத்த விஸ்தீரணம் சுமார் 40x30 அடி இருக்கலாம். கிணற்றில் மண்னை நிரப்பியதால் கிணற்றின் சுற்றுச் சுவரை உடைப்பதற்கு கிணற்றில் நிரப்பிய மண்னை பிரதிவாதி

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

வெளியேற்றினார் என்றால் எனக்கு தெரியாது. கிணற்றில் முதலில் தண்ணீர் இருந்தது என்றும் அந்த தண்ணீரை வெளியேற்ற ேவண்டும் என்று பிரதிவாதிகேட்டார் என்றும், அதன்பிறக தண்ணீரை வெளியேற்றாமல் கிணற்றை முழுவதும் நிரப்பிவிட்டே,ன் என்றால்சரியல்ல. கிணற்றில் மண்ணை அள்ளிவிட்டு சுற்றுசுவரைஉடைத்து எடுத்துவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. கிணற்றில் மண்னை வைத்து நிரப்பிவிட்டதால் மண்ணில் இறுக்கம் கிடைக்காது என்பதால் பவுண்டேசன் முறைப்படி இல்லாமல் file foundation முறைப்படி தேர்ந்தெடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மண் நிரப்பியதால் கிணற்று மண்ணை அள்ளுவதற்கு கிணற்றை சுற்றியுள்ள இடத்தையும் தோண்டவேண்டிய நிலை ஏற்பட்டுளளது என்றால் எனக்கு தெரியாது. அதனால் தான் இயந்திரங்களை இறக்கி கிணற்றில் இருநது மண்ணை வெளியே எடுக்க முடிந்தது என்றால் எனக்கு தெரியாது. தரைமட்டத்தில் இருநது கிணற்றில் 13 அடி தோண்டினார்கள் என்றால் எனக்கு தெரியாது. எ ன் இடத்தில் கீழ் தளம் தரைதளம், முதல் மாடி கட்டப்பட்டது என்றால் சரிதான். என் இடத்தில் 13 அடி தோண்டியபின்பு அதற்கு கீழே File foundation போடுவதற்கு 25 அடி ஆழம் 11 பில்லர் போடுவதற்காக தோண்டப்பட்டது என்றால் டிசைனர் பொறியாளர் குறிப்பிட்டது போன்று தான் செய்யபப்டடது. கீழ் தளம் முழுவதும் அடித்தளம் , சுற்றுச்சுவர் அனைத்தும் கான்கிரிட் சுவரால் கட்டப்பட்து என்றால் எனக்குதெரியாது. பிரதிவாதி இந்த வேலை பார்த்தது வந்தபோது செட்டியார்பட்டி கிராமத்தில் உள்ள வணிகவளாகத்தில் முதல் மாடி அமைப்பதற்கு வேலை உத்தரவு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த முதல்மாடியின் விஸ்தீரணம் 1925 சதுரஅடி என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. செட்டியார்பட்டி கிராமத்தில் முதல் மாடியை நல்ல முறையில் கட்டி முடித்துவிட்டார்கள் என்றால் கட்டி முடித்துவிட்டார்கள் அந்த கட்டிடம் கட்டியது சம்பந்தமாக எனக்கும் பிரதிவாதிக்கும் எந்தவித பிரச்சனையும் கிடையாது என்றால் இல்லை. செட்டியார் பட்டி வணிகவளாகம் கட்டியதற்கு நான் ரூ5,98,750/-

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

தரவேண்டும் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு ரூ5,98,750/- தரவேண் டும் என்றும், அந்த தொகையை இந்த சொத்து கணக்கு முடிக்கும் போது தருவதாக ஒப்புக் கொண்டேன் என்றால் சரியல்ல. வீட்டின் வேலை நடப்பதை நான் அடிக்கடி சென்று பார்த்து வந்தேன் என்றால் இல்லை. நான் வீட்டின் வேலை பார்க்கும் போது உடன்இருந்தேன் என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. File foundation மூலம் கட்டிடம் கட்டியதால் பிரதிவாதிக்கு ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட தொகையை விட அதிகமாக செலவானது என்றால் சரியல்ல. நான் கிணற்றில் தண்ணீரை வெளியேற்றி இருந்து மண் முடாமல் இருந்திருந்தால் பிரதிவாதிக்கு அதிகப்படியான செலவு வந்திருக்காது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு கொடுத்தாக கூறும் 4 பகுதியில் முதல் இரண்டு பகுதியில் பகுதி தொகையாக தான் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 17.05.2022 அன்று ரூ10,000/- த்தை வங்கி மூலம் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அதுபோன்று பகுதி 3,4 ல் கண்ட தொகைகளை நான் பிரதிவாதிக்கு கொடுத்தில்லை என்றால் சரியல்ல. கட்டிடம் கட்டும் போதே எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே தொகை அதிகமாக பெற்றது சம்பந்தமாக மதுரையில் உள்ள காவல் இணைக்கண்காணிப்பாளரிடம் புகார் ெ காடுத்தேன். அந்த புகாரை தளவாய்புரம் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். அந்த விசாரணையின்போது எவ்வளவு தொகைக்கு கட்டிட் மகட்டப்பட்டுள்ளது என்று தகுதியான பொறியாளர் மூலம் ஆய்வு செய்துகணக்கு வழக்குகளை சரி செய்ய வேண்டும் என்று கூறிவிட்டார்கள். நான் அந்த விசாரணையின் போது மதுரைச் சேர்ந்த Cos consultancy and Architect என்ற நிறுவனத்தை சேர்ந்த மயில் வாகனம் என்பவரின் மூலம் கட்டிடததை ஆய்வு செய்து கணக்கு வழக்குகளை நிறைவு செய்வதாக நான் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். அதன்படி அவர் அளக்கவில்லை . நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், மதுரைச் சேர்ந்த Cos consultancy and Architect என்ற நிறுவனத்தை சேர்ந்த மயில் வாகனம் என்பவர் கட்டிடத்தை அளந்து எனக்கு அறிக்கையை என்னிடம் கொடுத்தார் என்றால்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

சரியல்ல. மதுரைச் சேர்ந்த Cos consultancy and Architect என்ற நிறுவனத்தை சேர்ந்த மயில் வாகனம் என்பவர் அளித்த அறிக்கையை நான் தாக்கல் செய்ததாக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அந்த அறிக்கை நான் நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த அறிக்கையை நான் தாக்கல் செய்தால் என் வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கீழ்தளம், தரைதளம், முதல்மாடி ஆகியவை முழுவதுமாக கட்டிட வேலை முடிக்கப்பட்டு பூச்சு வேலை மட்டும் தான் பாக்கி இருந்தது என்றால் முழுக்கட்டிடமும் கட்டி முடிக்கவில்லை. வாசாஆ.4 ற்கு நான் தான் ரூ6000/- பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் எந்த தேதியில் சொத்து அளக்கப்பட்டது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ.4 ன்படி அளப்பதற்கு நான் தான் பொறியாளரை அழைத்து சென்றேன். நான் பிரதிவாதிக்கு கட்டிடத்தைஅளக்க போவது சம்பந்தமாக தகவல் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எழுத்து மூலமாக தகவல் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.4 ன் படி பொறியாளரை அழைத்த சென்றவிவரமும், அளந்த விவரமும் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இருக்கும் செங்கல் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் என்னுடைய பொருட்கள். வாசாஆ.4 கட்டிடத்திற்குரிய தன்மை , கட்டிட அமைப்பு, பயன்படுத்திய பொருட்கள் மற்றும் அதற்கான செலவு தொகைகள் பற்றி எனக்கு சாதகமாக வழங்கப்பட்ட அறிக்கை என்றால் சரியல்ல. வாசாஆ.4 சட்டபடி செல்லத்ததக்கதல் லஎன்றும், ஒருதலை பட்சமானது என்றும், வாசாஆ.4 பிரதிவாதியை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வாசாஆ.5 பொறியாளரையும் நான் தான் அழைத்து சென்றேன்என்றால் சரிதான். பிரபாகரன் மூலம் ்சொத்தை அளப்பதற்கு முன்பாக பிரதிவாதிக்கு நான் தகவல் கூறினேனா என்றால் அலைபேசிமூலம் தகவல் தெரிவித்தேன். வாசாஆ.5 ல் சொத்தை எந்த தேதியில்ஆய்வு செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

வாசா.ஆ.5 ன் படி அளக்கும் போது பிரதிவாதி இல்லை என்றால் சரிதான். பிரபாகரன் பிரதிவாதிக்கு அளப்பது சம்பந்தமாக தகவல் கொடுத்தாரா என்று எ னக்கு தெரியாது. நான் பிரபாகரனிடம் பிரதிவாதிக்கு தகவல் கொடுக்க கொடுத்தீர்களா என்று கேட்டேன் என்றால் எனக்கு அப்போது தோன்றவில்லை. வாசாஆ.5 லும் கல் மற்றும் செங்கல் இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும், பிரபாகரனும் என்ன பேசினோம் என்றும், என்ன முடிவுக்கு வந்தோம் என்று பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. அந்த அறிக்கையில் எந்த வகையான கட்டுமானம் கட்டப்பட்டது , கட்டிடத்தின் தன்மை அதற்குண்டான செலவுகள் எ ன்ன எ ன்று சரியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 கட்டிடத்திற்குரிய தன்மை , கட்டிட அமைப்பு, பயன்படுத்திய பொருட்கள் மற்றும் அதற்கான செலவு தொகைகள் பற்றி எனக்கு சாதகமாக வழங்கப்பட்ட அறிக்கை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 சட்டபடி செல்லத்ததக்கதல் லஎன்றும், ஒருதலை பட்சமானது என்றும், வா.சா.ஆ.45 பிரதிவாதியை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வாசாஆ.11 அன்னை கண்ஸ்டரக்சன் என் றநிறுவனத்தின்மூலமாக மீத வேலைகளை முடித்துவிட்டேன் .வாசாஆ.11 ஒப்பந்ததிற்கு முன்பாக வாசாஆ.1 ஒப்பந்ததை இரத்து செய்வதாக கூறி பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான் ஆனால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வேலை பார்ப்பதை தடுக்க கூடாது என்று உத்தரவு பெற்றேன். வாசாஆ.6 வழக்கு சங்கதி பற்றி தான் தாக்கல் செய்தேன் என்றும், வேலை பார்ப்பதை தடுக்கக்கூடாது என்று மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ.6 இந்த வழக்கில் வழக்குமூலம் உருவாக்கக்வேண்டும்எ ன்பதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அன்னை கண்ஸ்டரக்சன் உடன் வாசாஆ.11 ஒப்பந்தம் செய்யும் போது தாவாசொத்தில் இதற்கு முன்பாக என்ன வேலை முடிக்கப்பட்டது என்று கூறப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.11 ன் படி அன்னை கண்ஸ்டரக்சனுக்கு கொடுக்கப்பட்ட தொகைகள் வாசாஆ.11 ன் பின்பக்கம் வரவு வைக்கப்ட்டுள்ளது என்றால் சரிதான். நான்ஏற்கனவே பிரதிவாதியுடன் கூடிய

| |
|---|
| சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,<br>இராஜபாளையம். |

வாசாஆ.1 ஒப்பந்தம் இரத்து செய்யப்படாமல் வாசாஆ.11 ஒப்பந்தம் தவறானது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு நான் கொடுக்கவேண்டிய தொாகையை கொடுக்காமல் ஏமாற்ற வேண்டும் என்று நோக்கத்திற்காக வாசஆ.11 ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. ஒப்பந்தப்படி 62% தொகையை பிரதிவாதி பெற்றுக் கொண்டார் என்று நான் பிராதில் ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி தாவா கட்டிடத்திற்கு வாசாஆ.1ன் படி என்னென்ன வேலைகள் செய்தார் என்றும், அந்த வேலைக்காக எவ்வளவு தொகை பெற்றுக் கொண்டார் என்று குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்று கேட்டால் கூறவில்லை. ஆனால் வாசாஆ.1ன்படி முழுவதுமாக கட்டிடம் கட்டி முடிக்கவில்லை. கட்டிடம் முடிக்காதது சம்பந்தமாக பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் வழக்கறிஞர் அறிவிப்ப அனுப்பவில்லை நேரடியாக தான் கேட்டேன் நேரடியாக கேட்டதாக பிராதிலும் நிருபணவாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கட்டிய கட்டிடத்தின் வேலையின் அளவு மற்றும் மதிப்பு பிராதிலும், முதல்விசாரணையிலும் கூறவில்லை என்றால்சரியல்ல. பிராதின் சொத்து விவரத்தில் சதுரஅடி மற்றும் மால் விவரங்கள் தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி கட்டிய கட்டிடத்திற்குஉண்டான தொகையை விட அதிக்ப்படியான தொகையை வாங்கியுள்ளார் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தில் கேமரா மாட்டியிருந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதி தாவா சொத்தில் ரூ10,00,000/- மதிப்பிலான சிமெண்ட, மணல், செங்கல் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியின் கீழ் வேலை பார்க்கும் தொழிலாளர்களை தொந்தரவு செய்து கட்டிடம் கட்டவிடாமல் இடையூறு செய்து வந்தேன் என்றால்சரியல்ல. பிரதிவாதி கட்டிய 2 கட்டிடங்கள் படி பிரதிவாதிக்கு நான்தான் ரூ14,88,150/- கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. மயில்வாகனம் அறிக்கையின் படி நான் பிரதிவாதிக்கு பணம் கொடுக்கவேண்டியிருப்பதால் தான் அநத அறிக்கையை இந்த

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மாவட்ட சட்டபபணிகள் ஆணைக்குழுவில் வா.சா.ஆ.9 ன் படி நான் தான் பணம் கொடுக்கவேண்டும் எ ன்று மனு கொடுத்து நான்விசாரணைக்கு ஆஜரானேன். நான் பணம் கொடுக்கவில்லை என்றால் சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்யக்கூறினேன். சொத்தை அளப்பதற்கு நான் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரி மனுதாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான். நானும், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்க்குழுவில் மனு கொடுத்தேன் என்றால் சரிதான் . பிரதிவாதி ஆஜரானார் என்றால் எனக்கு தெரியாது. பிராதில் கேட்டுள்ள தொகையை பிரதிவாதி எனக்கு செலுத்தவேண்டியதில்லை என்றும் நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும், நான் பிரதிவாதிக்கு பணம் கொடுக்க வேண்டும் என்பதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் கூறியுள்ள தொகை முழுவதையும் பிரதிவாதி பெற்றுக் கொண்டதில்லை என்றால் சரியல்ல. கட்டிடம் கட்டும் போது நான் உடன் இருந்து பார்வையிட்டேன் என்றும் தற்போது வழக்கிற்காக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும்,வா.சா.ஆ.4,5 ன் படி எந்த பரிகாரமும் கிடைக்கககூடியதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.